DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 03 /2019**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜேஷ்வரன் | Caste: | |
| Father's Name: | மூக்கையா | Calling: | பெயிண்டர் |
| Village: | முதலூர், வடக்கு தெரு, | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 29/2026 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.06.2026

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. ஏனைய எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது பரமக்குடி தாலுகா, முதலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் 2 முத்துச்சாமி, 3. மணிகண்டன், 4. ராஜத்துரை ஆகியோரை தெரியும். நாங்கள் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக எங்கள் தெருவில் உள்ள சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான கடை முன்பாக நின்றுகொண்டிருந்தேன். அப்போது நேரம் இரவு 8 – 9 இருக்கும். சண்டை போடும் சத்தம் கேட்டது. அங்கு கூட்டமாக சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் வேடிக்கை பார்ப்பதற்காக சென்றிருந்தேன். அப்போது யாரோ எறிந்த கல் வலதுபுற கன்னத்தில் பட்டு எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அதனால் நான் மயங்கிவிட்டேன். கண் முழித்து பார்த்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில்

SELVARAJAN SIVAKADATCHAM
Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.29 15:44:24 +0530

சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தேன். சத்திரக்குடி காவல்துறையினர் வந்து எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கி சென்றார்கள். அதில் என்ன எழுதியிருக்கிறது என்று ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்**. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 02.03.2017ம் தேதி இரவு 8 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த முத்துச்சாமி , மணிகண்டன், ராஜதுரை ஆகியோர் சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான பெட்டிக்கடைக்கு முன்பாக தெருவிளக்கு வெளிச்சத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது ஆஜர் எதிரிகள் மது அருந்திவிட்டு அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது நாங்கள் தெருவில் உட்கார்ந்து இப்படி பேசலாமா என்று கேட்டபோது எங்களை சாதியை சொல்லி திட்டி எங்களை தட்டி கேட்கும் அளவுக்கு உங்களுக்கு தைரியமாடா என்றும் எங்களை அசிங்கமாக திட்டினார்கள் மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னதும், ஆஜர் எதிரிகள் அங்கு கிடந்த ஜல்லி கல்களை எடுத்து எறிந்ததில் எனது வலது கண் பட்டைக்கு கீழ் காயம் ஏற்பட்டது என்றும், ஒடுங்கடா தேவடியா பயலுகளா என்று திட்டி 1வது

SELVARAJAN SIVAKADATCHAM
Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.29 15:44:29 +0530

எதிரி கல்லால் எறிந்ததில் எனக்கு கடைவாய் பல் அடிபட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், மகேஷ் மற்றும் கார்த்திக் இருவரும் முத்துச்சாமியை கல்லால் எறிந்து நெஞ்சில் வீக்கக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும், இந்த கல் வீச்சு சம்பவத்தில் மணிகண்டனுக்கு முழங்காலில் வீக்கக்காயம் ஏற்பட்டது என்றும், விக்னேஷ், ராஜதுரையின் வயிற்றில் எறிந்து வீக்கக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் நாங்கள் அனைவரும் வலி தாங்க முடியாமல் தெரு பக்கம் ஓடிய போது எங்களை பார்த்து எங்கள் சாதியை கூறி தேவடியா மகன்களா ஒழுங்காக இருங்கள் அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி விட்டு சென்றார்கள் என்றும் பின்பு காயம்பட்ட நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும் அங்கு நான் மட்டும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றும் முத்துச்சாமி, மணிகண்டன், ராஜதுரை ஆகியோர் சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் நாட்டு வைத்தியம் செய்து கொண்டார்கள் என்றும் நான் சிகிச்சையில் இருந்தபோது சத்திரக்குடி காவல் ஆய்வாளர் வந்து விசாரிக்க நடந்த சம்பவத்தை புகார் மனுவாக எழுதி கொடுத்தேன் என்றும், கடந்த 03.03.2017 ம் தேதி காவல் துணை கண்காணிப்பாளர் விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகளை தெரியாது என்றும், எதிரிகளால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றும், எதிரிகள் எங்களை சாதியை சொல்லி திட்டவில்லை என்றும், புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாது என்றும், தற்போது உண்மையை மறைத்து கூறுகிறேன் என்றும், எதிரிகளும் நாங்களும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களோடு சமாதானம் செய்துகொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SELVARAJAN SIVAKADATCHAM
Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.29 15:44:33 +0530

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

குறுக்கு விசாரணை இல்லை. (வழக்கறிஞர் ஆஜர்)

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.29 15:44:39 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.